# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1652/5- 2010 මැයි 03 වැනි සඳුදා - 2010.05.03

*1652/5 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பீ 16/2008.

### 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி வங்கிகளினால் தற்பொழுது கொண்டு நடாத்தப்படும் தொழிலை இக்கட்டளையின் மூலம் அத்தகைய அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்குகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2010, ஏப்பிறல் 30.

**அட்டவணை**

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 1. | 1998, ஒற்றோபர் 14 ஆந் திகதியுடைய இலக்கம் 1049/12 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட ரஜரட்ட அபிவிருத்தி வங்கி | 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி. |
| 2. | 1998, நவெம்பர் 11 ஆந் திகதியுடைய இலக்கம் 1053/10 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட ஊவா அபிவிருத்தி வங்கி | |
| 3. | 1998, நவெம்பர் 11 ஆந் திகதியுடைய இலக்கம் 1053/10 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி | |
| 4. | 1998, நவெம்பர் 11 ஆந் திகதியுடைய இலக்கம் 1053/10 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட வயம்ப அபிவிருத்தி வங்கி | |
| 5. | 1998, ஒற்றோபர் 14 ஆந் திகதியுடைய இலக்கம் 1049/12 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட றுகுணு அபிவிருத்தி வங்கி | |
| 6. | 1998, ஒற்றோபர் 14 ஆந் திகதியுடைய இலக்கம் 1049/11 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்ட கந்துரட்ட அபிவிருத்தி வங்கி | |

5- 368

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.